**S.C.No. 17/2021**
**நாள்: 04.12.2025**
**PW1 – சஷ்மிதா**

(குற்ற இறுதி அறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசை படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, காணொலி காட்சி மூலமாக ஆஜர்செய்யப்பட்டார்கள். 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 6ம் எதிரி கேசவன், 7ம் எதிரி அரவிந்த், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத்குமார், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர். அவர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

**Cr.M.P.1859/2025–ல் 24.11.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் பெற்றோர்களுக்கும் நாடார் சமூதாயத்திற்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் பகை இருந்தது என்றும் அதை நீங்கள் வழக்கிற்காக மறைத்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த கிருஷ்ணமூர்த்தி சேவல்போட்டி, பைக்ரேஸ் போன்ற போட்டிகளில் செல்வதால் அவருக்கு பல விரோதிகள் இருந்தார்கள் என்றும் அதை நீங்கள் மறைத்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பு துரைப்பாண்டியை எனக்கு தெரியாது. நீங்கள் துரைப்பாண்டியின் பெயரை யார் மூலம் எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு அடையாளம் காண்பித்தபோது தான் துரைப்பாண்டி என்று தெரிந்துகொண்டேன். துரைப்பாண்டி என்று நீங்கள் அடையாளம் காண்பித்த நபரின் பெயரை யார் கூறினார்கள் என்றால் அடையாளம் காண்பிக்கும்போது குற்றவியல் நீதித்துறை நடுவர் கூறினார். குற்றவியல் நீதித்துறை நடுவர் பெயர் கூறுவதற்கு முன்போ, பின்போ துரைப்பாண்டியின் பெயரை யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு துரைப்பாண்டியின் பெயர் எப்போதும் தெரியாது என்றும் சம்பவத்தின் போதோ சம்பவித்திற்கு பின்போ

நிங்ககள் அவரை பார்த்ததில்லை என்றும் பின்னர் உங்கள் கணவரின் இனத்தார் சொல்லிக்கொடுத்து துரைப்பாண்டி என்ற பெயரை சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. அஜித்குமாரை தெரியாது. அஜித்குமாரை நீங்கள் பார்த்ததில்லை என்று சொன்னால் பார்த்ததில்லை. அ.சா.ஆ.2 புகாரில் 18.09.2020 ஆம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் நீங்கள் உங்கள் கணவர் கிருஷ்ணமூர்த்தி, கொழுந்தனார் பெரியசாமி இளநீர் கடையில் இருந்தபோது கோகுலும், அவரது நண்பர் அஜித்குமாரும் கையில் அருவாளுடன் வந்து அவர்கள் இருவரும் கிருஷ்ணமூர்த்தியை வெட்டி அதனால் அவர் இறந்துவிட்டார் என்று கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான் நான் பதற்றத்தில் பெயர் மாற்றி கொடுத்துவிட்டேன். அஜித்குமாருக்கு நீங்கள் கொடுத்த குற்ற செய்கைகளை பின்னிட்டு இந்த வழக்கிற்காக SC ST சட்டம் வருவதற்காக எதிரி பெயரை சொல்லிக்கொடுத்து அடையாளம் காட்டி நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்றும் அதையெல்லாம் வழக்கிற்காக மறைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. துரைப்பாண்டியும், கோகுலும் Duke என்ற வண்டியில் வந்ததாகவோ அதில் சம்பவத்திற்கு பிறகு திரும்பிச்சென்றதாகவோ, நீங்கள் கொடுத்த புகாரிலோ, குவிமுச 164 வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் புகாரில் சொல்லவில்லை, குவிமுச 164 பிரிவு வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன். எனக்கு இளநீர் வெட்ட தெரியாது இளநீர் வியாபாரமும் தெரியாது. நீங்களும் உங்கள் கணவரும் கடைக்கு சென்ற போது மாமியார் ரஞ்சிதா, மாமனார் குணசேகரன் கடையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல என் மாமனார், மாமியார் எங்களுக்கு முன்பு கடைக்கு சென்றுவிட்டார்கள் நானும் என் கணவரும் சென்ற பிறகு அவர்கள் பொள்ளாச்சிக்கு சென்று விட்டார்கள். நீங்கள் கடைக்கு சென்ற 15 நிமிடங்கள் கழித்து மாமியார் ரஞ்சிதா, மாமனார்

குணசேகரன் ஆகியோர் கடையில் இருந்து சென்றார்கள் என்றால் சரிதான். நீங்கள் சென்று உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது அங்கு Chair இருந்தது. அந்த Chair–ல் ரத்தமாகிவிட்டது என்றால் சரிதான். கடையில் இளநீர் வெட்டுவதற்கான அருவாள்கள் இருந்தது. சம்பவ சமயத்தில் நீங்களும் உங்கள் கணவரும் உங்கள் கணவரின் இருசக்கர வாகனத்தில் சென்றீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கூறியது போல் நீங்கள் கடைக்கு செல்லவில்லை என்றும் உங்களுக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் யார் எப்போது என்ன ஆயுதத்தால் எங்கு வைத்து சம்பவம் நடந்தது என்ற விவரங்கள் உங்களக்கு தெரியாது என்றும் நீங்கள் நேரடியாக அப்பல்லோ மருத்துவமனைக்கு தான் சென்றீர்கள் என்றும் பின்னிட்டு புகார் உங்களிடம் பெறப்பட்டது என்றும் ஏற்கனவே பெறப்பட்ட புகார் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இரண்டு பேரும் ஒரே சமயத்தில்தான் வெட்டினார்கள். உங்களுக்கு அஜித்குமாரை நன்றாக தெரியும் என்றும் அவர் எந்த இனத்தை சேர்ந்தவர் என்று தெரியும் என்றும் அவர் உங்கள் கணவருக்கு எவ்வாறு சம்மந்தம் என்று தெரியும் என்றும் அவர் உங்கள் கணவரை வெட்டினார் என்றும் சொல்லிவிட்டு SC ST சட்டம் வராது என்பதால் பின்னிட்டு 2ம் எதிரி துரைப்பாண்டி மறவர் இனத்தை சேர்ந்தவர் என்பதால் அவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டு அவரை காட்டிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.12.04 17:57:45 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.